*திருத்தம்.-* முதல் பந்தியின் ஏழாம் வரிசையில் "இறக்குமதி செய்யவோ" என்ற சொற்பதம் நீக்கப்படுகிறது மற்றும் இல. 6 இன் இறுதியில் "/இணையத்தளம்" என்ற சொற்பதம் உட்புகுத்தப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது


අංක 2286/26 - 2022 ජුනි මස 29 වැනි බදාදා - 2022.06.29

2286/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இலக்கம் 85

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**
**(திருத்தியமைக்கப்பட்டது)**

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, அனைத்து இறக்குமதியாளர்கள், தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள், விநியோகத்தர்கள், பொதியிடுபவர்கள், இணையதளம் மூலம் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் (Online Traders) மற்றும் வியாபாரிகள் எவரும் நுகர்வோரினால் சில்லறை விலைக்கு கொள்வனவு செய்யப்படும் அனைத்து வியாபாரப் பொருட்களினதும் இறுதி உற்பத்தி திகதி (End Product) உள்ளடங்கும் பொதி உறை அல்லது கொள்கலன் மீது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தெளிவாக விளங்கக்கூடிய இடத்தில் அச்சடித்திருந்தாலன்றி அல்லது அகற்ற முடியாத சுட்டுத் துண்டு மூலம் வெளிப்படுத்தினாலன்றி அத்தகைய பண்டங்களை தயாரிக்கவோ, உற்பத்தி செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ, விநியோகிக்கவோ, பொதியிடவோ, மீள் பொதியிடவோ, விற்பனை செய்யவோ, விற்பனைக்கு காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வெளிப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக வழங்கவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

1. ஆகக் கூடுதலான சில்லறை விலை;
2. நிறை அல்லது தொகை ;
3. உற்பத்தி செய்த திகதி/ மீள் பொதியிடப்பட்டிருப்பின் பொதியிடப்பட்ட திகதி;
4. காலாவதி திகதி/ பாவனைக்கு உகந்த கடைசித் திகதி/ செயற்பாட்டுக் காலம் (காலாவதியாகாத பண்டங்களுக்கு அவசியமில்லை);

5. தொகுதி/குறியீட்டு இலக்கம் ;
6. உற்பத்தியாளரின் பெயர்/பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்/இணையதளம் ;
7. இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் இறக்குமதி செய்யப்பட்ட நாடு, வழங்குநர் அல்லது இறக்குமதியாளர் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம்/இணைய தளம்.

இப்பணிப்புரை 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**சாந்த நிரிஎல்ல,**
தவிசாளர்.

கொழும்பு,
2022, யூன் 29.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.